



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.7.2023) மதுரை புதுநத்தம் சாலையில் தரை மற்றும் 6 தளங்களுடன் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை திறந்து வைத்து, விழாப் பேருரையாற்றினார்.

# முத்தமிழறிஞர் கலைஞரே ஒரு மாபெரும் நூலகம்தான்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

கடைக்கோடி மனிதர்கள் வரை அத்தனை பேருக்கும் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பொறுப்பேற்று இருக்கின்ற கடமையையும் தாண்டி, உள்ளார்ந்த அக்கறையும் ஆர்வமும், ஒவ்வொருவருக்கும் இருந்தால்தான் இவ்வளவு நேர்த்தியாக ஒன்றை உருவாக்க முடியும். இதையெல்லாம் தாண்டி, தமிழினத் தலைவர் கலைஞர் மேல் வைத்திருக்கின்ற அன்பின் வெளிப்பாடுதான் இந்த நூலகம்.

மதிப்பிற்குரிய ஷிவ் நாடார் அவர்களை இந்த நிகழ்ச்சிக்கு அழைத்துக் கொண்டு வந்திருக்கிறோம். பெரிதாக, பொது நிகழ்ச்சிகள் எதிலும் அவர் கலந்துகொள்ள மாட்டார். ஆனால், இவரையும், இவரது மகள் ரோஷினி அவர்களையும் மாணவ, மாணவியர்களான நீங்கள் பார்க்க வேண்டும் என்பதற்காகதான் நான் அழைத்துக் கொண்டு வந்திருக்கின்றேன்.

மிகப்பெரிய தொழில் அதிபர் என்று சொல்வது மட்டுமல்ல, அவருடைய பெருமை; இந்திய தொழிலதிபர்களில் அதிகமான தொகைளை நன்கொடையாக வழங்கக்கூடியவர் என்று பாராட்டப்படக் கூடியவர் அவர்.

**அதிக நன்கொடை வழங்கும் தொழிலதிபர் ஷிவ் நாடார்!**

“உனக்கு பணம் வரும்போது அதிகப்படியானவர்களுக்கு உதவி செய்ய” வேண்டும் என்று இவருடைய தாயார் சொன்னார்களாம். அதற்காகவே அறக்கட்டளை தொடங்கியவர் இவர். 50 நாடுகளில் கிட்டத்தட்ட 2 இலட்சம் பேர் வேலை பார்க்கின்ற அளவுக்கு ஹெச்.சி.எல். நிறுவனத்தினுடைய நிறுவனரான இவரும் உங்களைபோல அரசுப் பள்ளியில் படித்தவர்தான். பல கிராமங்களைத் தத்தெடுத்து உதவிகளை செய்து கொண்டிருக்கிறார்.

ஒரு கிராமத்தில் பிறந்து, மாநகராட்சி பள்ளியில் படித்து, மிகச்சிறிய நிறுவனத்தை சொந்த முயற்சியால் தொடங்கி, இன்றைக்கு இவ்வளவு பெரிய மனிதராக அவர் உயர்ந்திருக்கிறார். இப்படிப்பட்டவரை உங்களுக்கு ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக அறிமுகப்படுத்தத்தான் இன்றைக்கு சிறப்பு அழைப்பாளராக அவர் அழைக்கப்பட்டிருக்கிறார்.

அவருடைய மகள் ரோஷினி அவர்கள், அந்த நிறுவனத்தினுடைய இயக்குநராக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். பெண்கள் அனைத்துப் பொறுப்புகளிலும் இறங்கிப் பணியாற்ற வேண்டும் என்ற தந்தை பெரியாரின் கனவு நிறைவேறும் காட்சியினுடைய அடையாளமாகவும், இவர்கள் இருவரும் கலைஞர் நூற்றாண்டு நூலகத் திறப்பு விழாவிற்கு வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நான் முதலில் உங்கள் அனைவரின் சார்பில் என்னுடைய நன்றி! நன்றி! நன்றி!

**தலைவர் கலைஞர் சிலை வடிவில் வரவேற்கிறார்!**

கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை பொறுத்தவரைக்கும், குழந்தைகள் - மாணவர்கள் போட்டித் தேர்வர்கள் - மாற்றுத் திறனாளிகள் என அனைவரும் பயன்பெறக்கூடிய வகையில் ஆறு தளங்கள் மூன்று லட்சம் புத்தகங்களைப் பெற்றிருக்கக்கூடிய இந்த நூலகத்திற்கு அறிவுத் தேடலுடன் நீங்கள் வரும்போது உங்களை அன்போடு வரவேற்க தலைவர் கலைஞரே சிலை வடிவமாக இங்கே காட்சியளித்துக் கொண்டிருக்கிறார்.

கலைஞப் பொறுத்தவரைக்கும் எந்த துறையில் நுழைந்தாலும் அந்த துறையில், அவர்தான் ‘நம்பர் ஒன்’! அரசியலா? ஐம்பது ஆண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர். ஐந்து முறை தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர். அதிக முறை சட்டமன்ற உறுப்பினர், நீண்ட கால எதிர்க்கட்சித் தலைவராவும் இருந்திருக்கார்!

சினிமாவா? கதை எழுதினார். திரைக்கதை வசனம் எழுதினார். பாடல்கள் எழுதினார். திரைப்படங்களை தயாரித்தார்.

நாடகமேடையா? நாடகங்களைத் தயாரித்தார், கதை வசனம் எழுதினார். நடிக்கவும் செய்தார்.

பத்திரிக்கை உலகமா? மாணவனாக இருக்கும்போதே கையெழுத்துப் பிரதியாக பத்திரிக்கையை நடத்தினார். பத்திரிக்கை ஆசிரியராக இருந்தார். எழுத்தாளராக, பத்திரிக்கையாளராவும் இயங்கினார்.

இலக்கியமா? கவிஞர் சிறுகதை ஆசிரியர் - நாவலாசிரியர் - உரையாசிரியர் என்று எல்லாவற்றிலும் முத்திரை பதித்தார்.

இப்படிப்பட்ட பன்முக ஆற்றல் கொண்ட முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களுடைய பெயரில்தான் பன்முக ஆற்றலை நீங்களும் வளர்த்துக் கொள்ளக்கூடிய இந்த நூலகம் இன்று திறந்து வைக்கப்பட்டிருக்கிறது!

> **கலைஞப் பொறுத்தவரைக்கும் எந்த துறையில் நுழைந்தாலும் அந்த துறையில், அவர்தான் ‘நம்பர் ஒன்’! அரசியலா? ஐம்பது ஆண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர். ஐந்து முறை தமிழ் நாட்டினுடைய முதலமைச்சர். அதிக முறை சட்டமன்ற உறுப்பினர், நீண்ட கால எதிர்க்கட்சித் தலைவராவும் இருந்திருக்கார்! சினிமாவா? கதை எழுதினார். திரைக்கதை வசனம் எழுதினார். பாடல்கள் எழுதினார். திரைப் படங்களை தயாரித்தார். நாடகமேடையா? நாடகங்களைத் தயாரித்தார், கதை வசனம் எழுதினார். நடிக்கவும் செய்தார். பத்திரிக்கை உலகமா? மாணவனாக இருக்கும்போதே கையெழுத்துப் பிரதியாக பத்திரிக்கையை நடத்தினார். பத்திரிக்கை ஆசிரியராக இருந்தார். எழுத்தாளராக, பத்திரிக்கையாளராவும் இயங்கினார். இலக்கியமா? கவிஞர் சிறுகதை ஆசிரியர் - நாவலாசிரியர் - உரையாசிரியர் என்று எல்லாவற்றிலும் முத்திரை பதித்தார்.**

**கலைஞரின் புத்தகங்களே பெரிய நூலகமாக இருக்கும்!**

கலைஞரே மிகப்பெரிய நூலகம்தான்! அவர் எழுதிய புத்தகங்களை வைத்தால் அதுவே பெரிய நூலகம் போல இருக்கும்.

* நெஞ்சுக்கு நீதி
* குறளோவியம்
* சங்கத்தமிழ்
* சிலப்பதிகார நாடகக் காப்பியம்
* தென்பாண்டிச் சிங்கம்
* தொல்காப்பியப் பூங்கா
* பாயும் புலி பண்டாரக வன்னியன்
* ரோமாபுரிப் பாண்டியன்
* பொன்னர் சங்கர்
* தாய்
* திருக்குறள் உரை
* விடுதலைக் கிளர்ச்சி
* வெள்ளிக்கிழமை
* புதையல்
* ஒரே ரத்தம்
* இருளும் ஒளியும்
* கிழவன் கனவு
* துடிக்கும் இளமை
* நளாயினி
* பழக்கூடை
* கவிதையல்ல
* ஆறுமாதக் கடுங்காவல்
* சிறையில் பூத்த சின்னசின்ன மலர்கள்
* வைரமணிகள்
* நச்சுக்கோப்பை
* தூக்குமேடை
* உதயசூரியன் -

இப்படி அவருடைய புத்தகங்களை சொல்லிக் கொண்டே போகலாம்!

நெஞ்சுக்கு நீதி மட்டும் ஆறு பாகங்கள்!

உடன்பிறப்புகளுக்கு அவர் எழுதிய கடிதங்கள் 54 தொகுதிகளாக வெளியிடப்பட்டிருக்கிறது. அவருடைய சட்டமன்ற உரைகள் 12 பாகங்களாக வெளி வந்திருக்கிறது. அவர் ஆற்றிய உரைகள் - சொற்பொழிவுகள் இன்னும் முழுமையாக தொகுக்கப்படவில்லை.

**ஆற்றிய உரைகள் 100 க்கும் மேற்பட்ட தொகுதிகளாகும்!**

1945 முதல் அவர் ஆற்றிய உரைகளைத் தொகுத்தால் மட்டுமே நூற்றுக்கும் மேற்பட்ட தொகுதிகளாக வெளியிட முடியும்.

* சிறுகதைகள்
* கவிதைகள்
* பெட்டிச் செய்திகள்
* நாடகங்கள்
* பத்திரிக்கைகளில் எழுதிய துணுக்குகள்
* ஓவியங்கள்
* கருத்துச் சித்திரங்கள்

இதையெல்லாம் மொத்தமாக தொகுத்தால் இன்னும் பல தொகுதிகள் வெளியாகும்.

இதையெல்லாம் மட்டுமே வைத்து ஒரு தனி நூலகம் அமைக்கலாம். அதனால்தான் கலைஞரே ஒரு நூலகம் என்று சொன்னேன்.

**எழுதுகோல் படையையே வைத்திருந்தவர் கலைஞர்!**

கலைஞரை பற்றி எழுதியவர்கள் கலைஞரை ஆய்வு செய்தவர்கள் கலைஞரை மாதிரியே எழுதியவர்கள் என்று தமிழ்நாட்டில் தனக்கென ஒரு எழுதுகோல் படையையே வைத்திருந்தார் தலைவர் கலைஞர்.

நம் தமிழ்நாட்டில் ‘கலைஞர் பரம்பரை’ என்றே ஒன்று இருக்கிறது. நம்முடைய இந்தக் கலைஞர் பரம்பரைதான் தமிழ்நாட்டை வாழையடி வாழையாக வளர்த்தெடுக்கின்ற பரம்பரை!

இங்கே பள்ளி கல்லூரி சார்ந்த மாணவ - மாணவியர் நிறைய பேர் வந்திருக்கிறீர்கள்! கலைஞருடைய வாழ்க்கையில் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய பாடங்கள் எவ்வளவோ இருக்கிறது!

திருவாரூருக்கு பக்கத்தில் இருக்குகின்ற திருக்குவளை கிராமத்தில் முத்து வேலருக்கும் அஞ்சுகம் அம்மையாருக்கும் மகனாக பிறந்த அவர், உங்களைப் போல மாணவராக இருந்த காலத்தில்தான் மொழிக்காகவும், இனத்துக்காகவும் போராடத் தொடங்கினார். திருக்குவளை தொடக்கப் பள்ளியில் ஒன்றாம் வகுப்பில் இருந்து ஐந்தாம் வகுப்பு வரை படித்தார். அப்போது அவர்தான் சட்டாம்பிள்ளை!

சட்டாம்பிள்ளை என்றால் ‘க்ளாஸ் லீடர்’ என்று அர்த்தம்! திருவாரூர் உயர்நிலைப் பள்ளியில் 5ஆம் வகுப்பில் சேர்த்துக் கொள்ள முடியாது என்று தலைமை ஆசிரியர் கஸ்தூரி ஐயங்கார் மறுத்து விட்டார். பள்ளியில் இடம் தரவில்லை என்றால் எதிரே இருக்கக்கூடிய கமலாலயம் தெப்பக்குளத்தில் குதித்து நான் உயிரை விட்டுவிடுவேன் என்று போர் குணத்துடன் சொன்னார். ஏனென்றால், படிப்பில் அவருக்கு அவ்வளவு ஆர்வம் இருந்தது! படிப்பு மேல் அவருக்கு இருந்த ஆர்வம் தான், இந்த ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயத்தினுடைய தாகம்!

படிப்பில் அவருக்கு இருக்கின்ற ஆர்வத்தை பார்த்து 5ஆம் வகுப்பில் சேர்ந்து

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## ‘வாட்ஸ் அப்’பில் வந்தது!

